

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.7.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆதவன் தீட்சண்யா, என்.சுப்பிரமணிய தம்பிரான், வி.பிரபு, பண்ணை எம்.பி. சிங்காரவேலன், வீரசங்கர், பாசூர் டி. செல்வராஜ், ஏ.கருப்பையா, டி. சேர்மதுரை, ஆர்.எஸ்.மணிகண்டன், திருமதி சி.கலாராணி மற்றும் புதிய ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் எம். கலைவாணன், ஏ.பழனிதேவா, பி.மருங்கன், வாரியச் செயலாளர் திருமதி ஜி.விமலா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன், கலை மற்றும் பண்பாட்டுத் துறை இயக்குநர் (பொறுப்பு) திருமதி இரா.கஜலட்சுமி ஆகியோர் உள்ளனர்.

### நாடு முழுவதும் இயற்கை எரிவாயு வழங்கலை உறுதிப்படுத்த - தேசிய அளவில்

# எரிவாயு குழாய் தொகுப்பு அமைக்கும் திட்டம் உள்ளதா?

### ஒன்றிய அரசுக்கு - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி!

*புதுடெல்லி, ஜூலை 22-*

*நாடு முழுவதும் இயற்கை எரிவாயு வழங்கலை உறுதிப்படுத்த தேசிய அளவிலான எரிவாயு குழாய்த் தொகுப்பு ஒன்றினை 2027ஆம் ஆண்டுக்குள் அமைக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா? அப்படி என்றால் இந்தத் திட்டம் பிரதமர் "கதி சக்தி" பெருந்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா? திட்ட விவரங்கள் என்ன? ஒன்றிய அரசின் நிதி ஆதாரம் எவ்வளவு? என்று பல்வேறு தகவல்களை தெரிவிக்கக் கோரி, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு வினா எழுப்பினார்.*

*இந்தக் கேள்விக்கு ஒன்றிய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணை அமைச்சர் இராமேஸ்வர் தேலி 20.7.2023 அன்று மக்களவையில் பதில் அளித்தார்.*



*எழுத்துப்பூர்வமாக தரப்பட்ட தனது பதிலில் அமைச்சர் தெரிவித்ததாவது:*

*"ஒரே இந்தியா ஒரே எரிவாயு தொகுப்பு" என்ற கொள்கை அடிப்படையில் தேசிய அளவிலான எரிவாயுக் குழாய் தொகுப்பு அமைத்திட பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்காற்று வாரியம் ஒன்றிய அரசினால் பணிக்கப்பட்டுள்ளது. அதன்படி நாட்டின் அனைத்து பகுதிகளையும் இணைக்கும் வண்ணம் 33,592 கிலோமீட்டர் நீளம் கொண்ட குழாய் தொகுப்பு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தம் 23,173 கிலோமீட்டர் அளவுக்கு பல்வேறு எரிவாயுக் குழாய் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில் 12,202 கிலோமீட்டர் நீளம் குழாய்கள் பல்வேறு மாநிலங்களில் அமைக்கப்பட்டு வருகிறது.*

**தமிழ்நாடு எரிவாயு குழாய் திட்டம்**

*ஒன்றிய அரசின் நிதி உதவியைப் பொறுத்தவரை, குழாய் தொகுப்பு அமைத்திடும் நிறுவனங்களின் இழப்பை ஈடுகட்டும் நோக்கில் இதுவரை ரூபாய் 10,735 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது, வடகிழக்கு மாநிலங்கள் குழாய் தொகுப்பு மற்றும் மேற்கு வங்காளம் ஒரிசா குழாய் திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*தற்போது குஜராத், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்கண்ட், ஒரிசா, மேற்கு வங்காளம், ஆந்திரா, தமிழ்நாடு மற்றும் அனைத்து வடகிழக்கு மாநிலங்களிலும் 12,202 கிலோமீட்டர் நீளம் கொண்ட எரிவாயுக் குழாய்களை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் எண்ணூர் மற்றும் ஆந்திராவின் நெல்லூர் இடையே 160 கிலோ மீட்டர் குழாய் பதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது இத்திட்டம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதால் பணிகள் எதுவும் நடைபெறவில்லை. ஏனைய எரிவாயுக் குழாய்கள் பதிக்கும் திட்டங்கள் அனைத்தும் 2023ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும். இந்தியன் ஆயில் கழகம் செயல்படுத்தும் ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள ஹசாரிபாக் ராஞ்சி குழாய் திட்டம் மட்டும் 2026ல் நிறைவேற்றப்படும். எண்ணூர் நெல்லூர் இடையே அமைக்கப்பட உள்ள திட்டம், தமிழ்நாட்டின் வடகோடிப் பகுதியில் 80 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பகுதிக்கு மட்டுமே பயன் தரும் எரிவாயுக் குழாய் திட்டத்தின் பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை என்பது பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் நாடாளுமன்றத்தில் 20.7.2023 அன்று அளித்த பதிலில் இருந்து தெளிவாகிறது.*

---

அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பிறந்தநாள்!

# உங்களின் பரந்த அனுபவமும், முற்போக்கான சிந்தனைகளும் நம்மை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லட்டும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூலை 22-

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேயின் பிறந்தநாளான நேற்று, அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து மகிழ்ந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மேலும் வலைதளங்கள் வாயிலாக வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், "உங்களின் (மல்லிகார்ஜுன கார்கே) பரந்த அனுபவமும், முற்போக்குச் சிந்தனைகளும் நம்மை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லட்டும்!" என்று வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.7.2023) அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்களின் பிறந்த நாளையொட்டி அவரை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பிறந்த நாள் வாழ்த்து களைத் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**மல்லிகார்ஜுன் கார்கே அவர்களே, உங்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.**



**இந்த கடினமான காலங்களில், மதச் சார்பற்ற கூட்டணிக்காக ஒருமித்த கருத்தைக் கொண்ட கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் உங்கள் தலைமைத்துவம் உண்மையிலேயே பாராட்டுக்குரியது.**

**உங்கள் பரந்த அனுபவமும், நமது தேசத்தின் முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்பும் எங்கள் அனைவரையும் ஊக்குவிக்கிறது.**

**வலிமையான INDIAவை உருவாக்குவதற்கான உங்கள் முயற்சிகள், நமது மகத்தான தேசத்தை வடிவமைத்த மதச் சார்பற்ற மற்றும் முற்போக்கான சிந்தனை களுடன் நம்மை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லட்டும்.**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### மணிப்பூர் கொடூரம் குறித்து நேரில் ஆய்வு செய்ய

# 'இந்தியா' கூட்டணித் தலைவர்கள் மணிப்பூர் பயணம்!

### இன்று செல்கின்றனர்!

*இம்பால், ஜூலை 22-*

*மணிப்பூர் கொடூரம் குறித்து நேரில் ஆய்வு செய்ய 'இந்தியா' கூட்டணித் தலைவர்கள் இன்று மணிப்பூர் செல்கின்றனர்.*

*மணிப்பூரில் கடந்த 80 நாட்களுக்கும் மேலாக பயங்கர வன்முறை நீடித்து வருகிறது. மணிப்பூரில் பழங்குடியினப் பெண்கள் இருவர், நிர்வாணமாக்கப்பட்டு இழுத்துச் சென்ற கொடூரம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.*

*இந்நிலையில், மணிப்பூர் கொடூரம் குறித்து நேரில் ஆய்வு செய்ய "இந்தியா" கூட்டணித் தலைவர்கள் இன்று மணிப்பூர் பயணம் செய்ய உள்ளனர்.*

*குடியரசுத் தலைவரைச் சந்தித்து முறையிடவும் "இந்தியா" கூட்டணித் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.*

*மணிப்பூர் கலவரம் குறித்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பிரதமர் மோடி விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் "இந்தியா" கூட்டணி வலியுறுத்தியுள்ளது.*


